KB14-2-2-TA

# இயேசுவே மேசியா என்பதை உறுதிபடுத்திடும் 16 தீர்க்கதரிசனங்கள் - பாகம் 2 - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சியில்ஃ இந்த ப{மிக்கு விசெசூpத்த நபரான மெசியாவை அனுப்ப பொவதாக தெவன் ஏற்கனவெ தமது தீர்க்கதரிசிகள் ஷலம் பல வருட';களுக்கு முன்பாகவெ டிசால்லியிருக்கிறாரா, குறிப்பாக என்ன தீர்க்கதரிசன';களை டிகாடுத்திருக்கிறார், எபிரெய வெதத்தில் எந்த பகுதிகளில் அந்த வார்த்தைகள் இருக்கிறது, அந்த தீர்க்கதரிசன';கள் உரைக்கப்பட்ட ய{த கூன';கள் வரப்பொகிற மெசியாவைக் குறித்து டிசால்லப்பட்ட குறிப்பான வார்த்தைகளை பஜரிந்துடிகாண்டார்களா, இந்த டிசய்திடிதாடரில் நாம் சுமார் 16 தீர்க்கதரிசன வார்த்தைகளை பார்த்திடலாம் ஆதாம் முதல் ஆபிரகாம் வரைஃ மொசெ முதல் தாவீது வரைஃ ஏசாயா முதல் தானியெல் சகரியா வரை. நாம் கெட்கலாம்ஃ இந்த மறுக்க முழயாத தீர்க்கதரிசன';கள் இயெசு தான் மெசியா என்பதை நிருபித்துள்ளதா,

எனது முதல் விருந்தினர் டாக்டர். வால்டர் டிபய்சர். அவர் இப்பொதுள்ள இறையியல் மெதைகளில் ஒருவர் மற்றும் இன்றைக்கு அடிமரிக்காவில் எபிரெய பத வசன';களின் வெத வல்லுநர். டாக்டர் டிகய்சர் முதன்மை தலைவரும் பிரசித்தடிபற்ற

பர்ய ஏற்ப்பாட்டு விரிவஜரையாளராகவஜம் கார்டன் - கான்டிவல் இறையியல் டிசமினரி ஞாமில்டனில் இருக்கிறார்.ஃ மா!;காவ்டிசட்!;. இரண்டாவதாக.ஃ டாக்டர் டெரல் பாக். அவரும் நிகர்;கால இறையியல் வல்லுநர்களில் ஒருவர் பஜதிய ஏற்ப்பாட்டு வல்லுநராக இருக்கிறார். அவர் பஜதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் முதன்மை ஆராய்ச்சி விரிவஜரையாளராக இருக்கிறார் பாரம்பரிய கலாச்சார அமைப்பின் ஒரு';கிணைப்பாளராக டாலா!; இறையியல் டிசமினரியில் இருக்கிறார் டாலா!;.ஃ டிடக்சா!;. இந்த விசெசூpத்த நிகர்;ச்சியில் இணைந்திடு';கள் கூhன் அன்கர்பர்க் நிகர்;ச்சி.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு இரண்டு பண்டிதர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், டாக்டர் டேரல் பாக் மற்றும் டாக்டர் வால்டர் கெய்சர், தேவன் இந்த பூமிக்கு தமது மேசியாவை அனுப்புவதற்கு ஆதாரமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்களை முன்னறிவித்தார் என்பதற்கு வரலாற்று ஆதராமிருக்கிறதா என்பதை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். இப்போது நாம் எபிரேய மொழியில் ஏசாயா 53ஐ பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவைகளில் பலவற்றை நாம் ஏற்கனவே பார்த்துவிட்டோம், இப்போது இந்த வசனங்களைப் பார்க்கலாம். அதை திரையில் காண்பிக்க விரும்புகிறேன், அதன்பிறகு அவைகளைப் பற்றிய இவர்களின் கருத்துக்களை நாம் கேட்க இருக்கிறோம். இதை கவனமாக பாருங்கள். ஏசாயா

தீர்க்கதரிசி கூறுகிறார், "அவர் (தாசன்) நெறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும் அவர் வாயை திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும், ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார். ஏன் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள். ஆனால் அவர் மரித்போது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவுமில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."

டாக்டர் கெய்சர், நீங்க இங்க இருக்கிறதுல எனக்கு சந்தோஷம் நீங்க இந்த வார்த்தைகளை பல வருடங்களாக தியானித்து வருகிறீர்கள், இதை குறித்து நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். இந்த வசனங்களை ஒவ்வொன்றாக வாசித்து அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். கிறிஸ்து தோன்றுவதற்கு பல வருடங்களுக்கு முன்பாக ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தில் தேவன் என்ன சொல்லுகிறார்?

டாக்டர். வால்டர் கெய்சர்: இப்ப, நாம 3 வசனங்களின் 4வது கட்டத்திற்கு வந்திருக்கிறோம். தாசனைக்குறித்த இரகசியத்தை 52:13-14ல் பார்த்தோம். அந்த தாசனுடைய புறக்கணிப்பை குறித்து

பார்த்தோம், 53:1-3. அதன் பிறகு இதனுடைய மையப்பகுதியான பாவநிவாரணத்தை பார்த்தோம், எப்படி தேவனும் மனிதனும் திரும்பவும் இணைந்தனர் என்று பார்த்தோம். இப்ப இந்த தாசனுடைய கீழ்ப்படிதலைப் பார்ப்போம். வசனம் 7ல் அவருடைய பாடுகளில் அவர் கீழ்ப்படிந்திருந்தார். வசனம் 8ல் அவருடைய மரணத்தில் அவர் கீழ்ப்படிந்திருந்தார். வசனம் 9ல் அவர் தனது அடக்கத்திலும் அவருக்கு கீழ்ப்படிந்திருந்தார். இவையனைத்தும் இறையியல் ரீதியாகவும் வரலாற்றுப்பூர்வமாகவும் விளக்கிட முடியும். உதாரணமாக, நம்முடைய தேவன் கடந்துசென்ற 5 சட்டவிரோதமான பாடுகள் இருக்கிறது, சோதிக்கப்பட்டார், ஆனால் அவர் முறுமுறுக்கவே இல்லை. அவர் தமது வாயை திறவாதிருந்தார், என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் துரிதமான 5 சோதனைகளில் அகப்பட்டார். ஒவவ்வொன்றும் அநியாயமானது. அவை சட்டத்தில் இல்லாதது. அதாவது, முதலாவதாக, அன்னா என்பவன் அவரை விசாரிக்கிறான். பிறகு அவர் பிரதான ஆசாரியருடைய வீட்டிற்கு கொண்டு போகப்பட்டார். அதன்பிறகு பிலாத்து இடைபடுகிறான். ஆவன் மூன்றாவதாக வருகிறார். அதன் பிறகு ஏரோது, இராயனுடைய பிரதிநிதியானவன், அவன் நான்காவதானவன். இறுதியில், பிலாத்து தீர்ப்பை சொல்லி ஒரு பாத்திரத்தில் தண்ணீர்கொண்டுவரச் சொல்லி தன் கைகளை கழுவி, “குற்றமில்லாத இரத்தத்தில் எனக்கு பங்கில்லை என்றான்.” ஆனால்? இப்படி, எளிதாக அவன் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, “துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்.” பன்மையில் உள்ளது. அவர் சிலுவையில் இரண்டு கள்ளர்கள் நடுவிலே தொங்கினார். இந்த வார்த்தையை பாருங்கள். துன்மார்க்கர் என்று பன்மையில் சொல்லப்பட்டுள்ளது. அதன் பிறகு அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார் என்கிறது, ஒருமை, இந்த முறை பன்மையல்ல. எப்படி இந்த பகுதி பல வருடங்களுக்கு பிறகு வெளியாக்கப்பட்டிருக்கிறது? ஏசாயாவின் நாட்கள் சுமார் கிமு 800 என்றால், இது 800 வருடங்களுக்கு பிறகு நடக்கப்போகிறவைகள். அர்மத்தியா ஊரானாகிய யோசேப்பு, “அவரை என் கல்லறையில் வையுங்கள் என்றான்.” அந்த நாட்களில் யூதர்களின் ஆலோசனை சங்கத்தின் தலைவர்களில் ஒருவனாக ஐசுவரியவானாக இருந்தான். இவையனைத்தும் நடக்கிற பொழுதிலும் அவர் எந்த கட்டத்திலும் வாயை திறவாதிருந்தார். அதனால் தான் இது இஸ்ரவேல் தேசத்தினுடைய பண்பாடலாக இருக்க முடியாது என்கிறோம். அங்கு, “அவர் கொடுமை செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை என்றிருக்கிறது.” அது நம் ஒருவருக்கும் பொருந்தாது, எந்த இஸ்ரவேலனுக்கும் பொருந்தாது. எனவே நம்முடைய தேவன் எவ்வளவாய் கீழ்ப்படிந்திருந்தார் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்திருந்தார், அதற்கு வரலாற்று ஆதாரங்கள் சாட்சியளிக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** டேரல், நீங்க யூத குலத்தை சேர்ந்தவர், இந்த வேத பகுதி யூதருடைய கூடுகைகளில் எப்போதும் வாசிக்கப்படுகிறது என்று நீங்கள் சொன்னீர்கள். அது உண்மையா?

**டாக்டர். டேரல் பாக:** ஆமாம் உண்மைதா. இது பாரம்பரிய வழக்கத்தில் எப்போதும் வாசிக்கப்படுவதில்லை. இந்த பகுதி பெரும்பாலும் ஒதுக்கப்பட்டதாக இருக்கிறது அதை உயர்த்தி சொல்வதற்கில்லை, மறந்துபோன நிலைதான். அதை மறந்துவிட்டோம் என்பதை நினைவில் கொண்டிருக்கவேண்டும் ஏனெனில் இதில் தான் விடுவிக்கிறவரின் செயல்பாடுகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த பகுதியை குறித்து பெரும்பாலும் நமக்கிருக்கும் கேள்வி என்னவென்றால், இது மேசியாவைக் குறித்துதான் சொல்கிறதென எப்படி தெரியும்? இது அவரது தாசன் என்பதை சொல்லுகிறதே. இந்த பாகத்தில் மேசியா என்று எங்கேயும் குறிப்பிடபடவில்லை. சரி, நமக்கு தெரிந்த வரையில் இதை ஏற்றுக்கொள்ள ஒரு காரணம் இது ஏசாயாவின் இரண்டாம் பாகம் என்பதால் தான். ஏசாயாவின் முதல் பாகத்தில் விடுவிக்கிறவர் யார் என்பதை நாம் அறிந்துகொண்டோம். அவர் ஒரு ராஜா, அவர் வல்லமையுள்ளவர், அவர் நம்மை விடுவித்திடுவார். அதுமட்டுமல்ல, அவர் சமாதானப்பிரபுவாக இருப்பார் அவர் ஆலோசனை கர்த்தர். எனவே ஏசாயாவின் முதல் பாகத்தில் இந்த நபர் எப்படிபட்டவராக இருப்பார் என்ற தெளிவை பெற்றுக்கொண்டோம். ஆனால் இது கதையின் இரண்டாவது பாகம்.

எனவே இரண்டாவது பாகத்திற்கு முதல் பாகத்தோடுள்ள உறவை நாம் மறந்துவிட்டால், கதையின் முழுமையை பெற முடியாது.

எனவே இந்த பகுதியை நாம் பார்க்கும்போது இதில் இயேசு அநியாயமாக தண்டிக்கப்படுகிறார் என்பதை பார்க்கிறோம். அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை. இந்த பகுதியை நாம் வாசிக்கையிலும் மறுபடியும் இதனை சுவிசேஷங்களில் வாசிக்கும்போதும் இயேசு சகல விதத்திலும் சோதிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டும், லூக்கா 23லும் பல இடங்களிலும் சொல்லப்பட்டிருப்பது போல, "அவர் ஒன்றுமறியாதவராய், குற்றமற்றவராக இருந்தார் என பார்க்கிறோம்." இதிலிருந்து மரணத்திற்கு பாத்திரராயில்லாத ஒருவர் மரணத்தை சந்திக்கிறார் என்பது தெளிவாகிறது. இதைதான் இந்த வேத பகுதி விளக்கிக் கூறுகிறது. எத்தியோப்பிய மந்திரி தான் வாசிக்கும் ஏசாயா 53றின் விளக்கத்தை பிலிப்புவினிடத்தில் கேட்கிறான், அவர்கள் வாசித்ததும் இந்த பகுதியை தான். இயேசுவின் மரணம் அநியாயமானது. ஆனால் அது எதற்காக என்று நாம் ஆராயும்போது, அவர் அநீதியாய் மரித்தார் என்றால், அவர் தன்னைக்குறித்து சொன்ன அனைத்தும் உண்மை என்பது விளங்குகிறது. அவர் தன்னை பற்றி சொன்ன அனைத்தும் உண்மையாயிருப்பதால் அவர் கூறிய அனைத்திற்கும் செவி கொடுக்க வேண்டியது அவசியம், அதைதான் அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ஜீவனுள்ள தேவனோடு நம்மை சேர்ப்பதும் இந்த நாடகத்தில் இருக்கிறது. அதில் ஆற்றல் இருக்கிறது, அந்த பிளக்கை நாம் மறுபடியும் அதனுடைய சாக்கெட்டில் பொருத்தி நமக்காக

வைக்கப்பட்டிருக்கிற ஜீவனுள்ள தேவனுடைய ஐக்கியத்தில் இணையவேண்டும். அவர் நம்முடைய பாவங்களை தன் மீது சுமந்துகொண்டார். அவர் குற்றமற்றவர். அவர் அநியாயமாக மரணத்திற்குட்படுத்தப்பட்டார். அவர் செய்த கிரியைகளின் பலனாக நாம் அவருடைய ஜனங்களாக இருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** நீங்க உங்க பட்டபடிப்பிற்காக எமுதிய நீண்ட கட்டுரையை பற்றி பேசவேண்டும் என விரும்புகிறேன், சோதிக்கப்பட்டார் என்ற தலைப்பு. ஏனென்றால் நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிறபடி, "அவர் தமது வாயை திறவாதிருந்தார்", என்று பார்த்தோம் ஆனால் ஒரு கட்டத்தில் அவர் தமது வாயை திறந்து சிலவற்றை சொன்னாரே. மாற்கிலுள்ள அதை எங்களுக்கு சொல்லுங்கள்.

**பாக:** சரி, இது உண்மையில் பரீட்சிக்கப்படுகறிதற்கும் சோதிக்கப்படுவதற்கு இடையிலான நிகழ்வு, ஏனெனில் யூதர்களுடைய காட்சியில் பிரதான ஆசாரியன் இயேசுவைப் பார்த்து அவர் தன்னைக் குறித்து கூறியதைப் பற்றி கேள்வி கேட்பார், "நீர் மேசியாவா, நீர் தேவனுடைய குமாரனா என்பார்," எந்த தண்டனையும் கொடுக்க அவர்களுக்கு வாய்ப்பில்லை. அதனால் அவர்கள் ரோமாபுரிக்கு போகும்போது மதத்தை அவமதித்தான் என்பதற்கு சாட்சியம் வேண்டியும், அதை அரசியல் குற்றமாக்க தீர்மானித்து, பிலாத்து இயேசுவை எப்படியும் சிலுவையில்

அறையும்படி முயற்சிக்கின்றனர். அதுதான் இதனுடைய பின்னனியாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** அதை நான் வாசிக்கிறேன் அதனால் ஜனங்களும் விளங்கிக்கொள்வார்கள், பிறகு அதை விளக்கிடுங்கள், ஓகே. மாற்கிலுள்ளதை இப்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம், முதலில் எழுதப்பட்டது, 14:61முதல் 65வரை: "பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி, "நீர் கிறிஸ்துதானா?" ஆல்ரைட், மேசியா, "ஆசீர்வதிக்கப்பட்டவரின் குமாரனா?" அங்கு அவன் "தேவன்" என்று சொல்லவில்லை, அதனால் "ஆசீர்வாதமானவரின் குமாரனா?" சரி, "நீர் மேசியாவா, தேவனுடைய குமாரனா?" இயேசு பிரதியுத்தரமாக, "நான் தான் என்றார். அதனுடைய அர்தத்தை விளங்குங்கள். "நீங்கள் காண்பீர்கள்." இந்த வரியை நாம் இதுவரைக்கும் பார்க்கவில்லை என நினைக்கிறேன், "மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் காண்பீர்கள் என்றார்." இதை அவர்களை தூண்டுவிடுவது போலிருந்தது, "பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு, "இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷனத்தைக் கேட்டீர்களே உங்களுக்கு என்ன தோன்றுகிறது என்றான்?அவர்கள் எல்லாரும் இவன் மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றார்கள்." இங்க என்ன நடக்கிறது?

**பாக:** சரி,தேவனுக்கு ஏற்கும் மதிப்புடையதாய் இந்த கேள்வி இருக்கிறது. "நீர் தான் மேசியாவா, ஆசீர்வாதமானவரின் குமாரனா?" யூத வழக்கப்படி, தேவனுடையவைகளைப் பற்றி பேசும் போது அவர்கள் தேவனை அறிக்கையிடமாட்டார்கள். தேவனுடைய நாமத்தை சொல்ல மாட்டார்கள். அவரைக் குறிக்கும் இனிய வார்த்தைகளை பயன்படுத்துவார்கள். எனவே இங்கு கேள்வியானது, தேவனுக்கு ஏற்ற மரியாதையோடு கேட்கப்படுகிறது.

இயேசுவினுடைய பதிலின் ஆரம்பம் "நான் அவர்தான்." இப்ப, சிலர் இந்த விஷயத்தை பெரிதுபடுத்திட விரும்புகிறார்கள். சிலரைப் போல நான் மிகைப்படுத்திக் கூற விரும்பவில்லை. சிலருடைய கருத்து, "நான்தான்" என்பது யாத்திராகமத்தில் "இருக்கிறேன்" என்ற, யெகோவா தேவனை குறிக்கிறது என்கின்றனர். அது சரியென்று எனக்கு தோன்றவில்லை. அவர் எளிமையான விதத்தில் அது உண்மைதான் என்பதை தான் சொல்கிறார். அதன் பிறகு அவர் ஒப்பிட்டுக்கூறுவதை பாருங்கள் சங்கீதம் 110:1 மற்றும் தானியேல் 7:13-14ஐ சொல்கிறார், அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார்." அவர் என்ன சொல்கிறார் என்றால், "இங்கு நீங்கள் என்னை சோதனைக்குட்படுத்திடலாம். என்னை மரணத்திற்கு பாத்திரனாக கருதிடலாம். நான் மரணத்தை பார்க்கும்படி நீங்கள் என்னை பிலாத்துவிடம் கொண்டுபோகலாம், ஆனால் நிச்சயம் ஒருநாளில் பிதாவின் வலதுபாரிசத்தில் நான் உட்கார்ந்து உங்களை நியாயந்தீர்க்கப்போகிறேன் என்கிறார்." அந்த பதில் அவர்களுக்கு பிடிக்கவில்லை, ஏனெனில் தேவன் அவரை ஆதரிப்பதாக

சொல்வதுபோலிருக்கிறது. அப்படி தேவன் இவரை ஆதரிக்கிறார் என்று எடுத்துக்கொண்டால் இயேசு தன்னைப்பற்றி கூறியவை அனைத்தும் உண்மையாகிடுமே.

**ஆன்கர்பெர்க்:** யா.இப்படி அவர் சொன்னது தேவ தூஷனத்திற்கு ஒப்பாக இருக்கிறதென்றனர் அதனால் அவரை மரணத்திற்கு பாத்திரவான் என்றனர். இப்போது எழும்பும் கேள்வி, அவர் உண்மையை சொன்னாரா அவர் சொன்னது உண்மை என்று தேவன் அதை அங்கிகரித்தாரா, அதைதான் நாம் ஏசாயாவிலிருந்து பார்க்கப்போகிறோம் அதை ஒரு இடைவேளைக்கு பிறகு தொடரலாம். இணைந்திருங்கள். இதை தவறவிடமாட்டடீர்கள் என நம்புகிறேன்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வரவேற்கிறோம் நாம் பேசிக்கொண்டிருப்பதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? ஏசாயா 53ஐ நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், இங்கு சொல்லப்பட்டிருப்பவர் இயேசு தான் என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? அதாவது, ஆமா இல்லன்னு ஏதாவது சொல்லனும். இந்த கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல இந்த தீர்க்கதரிசி என்ன சொல்லியிருக்கிறார் என்று தெரியவேண்டும், ஆல்ரைட். இப்ப ஏசாயாவின் மீதி பாகத்தைப் பார்க்கலாம். இன்னும் 3 வசனங்களை பார்க்க இருக்கிறோம். அதை உங்களுக்காக காண்பிக்க நிரும்புகிறேன். "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப்

பாடுகளுக்குட்படுத்தினார். அவருடைய ஆத்துமா தன்னை குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார். கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக்கண்டு திருப்தியாவார். என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்.அதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன். பலவான்களை அவர் தமக்கு கொள்ளையாக பங்கிட்டுக்கொள்வார்." எதனால்? "அவர் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து கொண்டதினால்." டாக்டர் கெய்சர், இதை, நீங்கள் பல ஆண்டுகளாக படித்து வருகிறீர்கள், பல வருடங்கள். இந்த வார்த்தைகள் நமக்கு என்ன சொல்கிறதென்று சொல்றீங்களா?

**கெய்சர்:** இதில் இரட்சகர் உயர்த்தப்படுகிறார், தேவனடைய தாசன் உயர்த்தப்படுவதை சொல்கிறது. அது அவரைப் பற்றிய இரகசியம், முதலாவதாக, அவரை எல்லாரும் புறக்கணிக்கிறார்கள். பிறகு பாவநிவாரண பலியாகிறார். ஆதன் பிறகு சுத்திகரிப்பு நடக்கிறது. இப்போது உயர்த்தப்படுகிறார். அவருடைய ஆத்துமாவை குற்றநிவாரண பலியாக கொடுத்தார் என்றிருக்கிறது, அதற்கு அர்த்தம், யாருடை யபாவங்கள் மன்னிக்கபடவேண்டும் என்ற விரும்புகிறார்களோ அவர்கள் இந்த குற்றநிவாரண பலியை

பாவத்திற்கான பலியாக செலுத்தும் போது அவர்களுக்கு அது மன்னிக்கப்படும். அவர்க்ள மீண்டும் மீண்டுமாக தொடர்ந்து மீருகங்களை பலியிடுவதை தவிர்க்கும்படியாக, மனுக்குலம் முழுவதற்காகவும், மனிதனாய் அவதரித்த தேவன், தம்முடைய ஜீவனை ஆத்துமாவை குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுப்பது எவ்வளவு அதிகம்? ஓ, இதனால் எல்லாம் ஒரே தரம் முடிவுற்று என்றென்றைக்குமாய் இருக்கும்.

இவையனைத்தும் நடைபெறுகிறபடியால் தேவன் தமது தாசனை அவருடைய சந்ததியை பார்கும்படியாக தயை செய்கிறார், அவருடைய வித்து. இப்போது விசுவாசிக்கிற அனைவரையும் கண்டார், தம்மை நோக்கி, உண்மையில், எனக்கு உணர்த்துதல் அளிக்கிறது. இந்த மேசியாவை நான் இருதயத்தில் ஏற்றுக்கொள்கிறேன் என்பவர்களை கண்டார்." மேலும் தேவன் மேசியாவினுடைய நாட்களை நீடித்திருக்கப்பண்ணினார், ஏனெனில், தேவனுடைய சித்தம் என்னவென்றால், அவருடைய திட்டம், நோக்கம் அனைத்தும் அவருடைய கையின் கிரியையை செழிக்க வைப்பது தான். எனவே நம்முடைய தேவன் சிலுவையில் பாடு அநுபவித்த பிறகு அவர் ஜீவ ஒளியை கண்டு திருப்தியடைவார்.

எனவே, அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு மாத்திரம் நித்திய வாழ்வு என்று இல்லாமல், முழு சிருஷ்டிக்கும் பெற்றிடுமாறு புதிய வானமும் புதிய பூமியும் உருவாகிடும். தம்மைப்பற்றும் அறிவினால், கசிவு என்ற வார்த்தையை உபயோகித்து சொன்னால், வியர்வை எனலாம், அதினிமித்தம் அநேகரை அவர் நீதிமான்களாக்கிடுவார். ஓ,

தேவனால் பிரகடணிக்கப்படுகிறது, குற்றத்தை ரத்துசெய்கிறேன்! இனி எதிர்மறையானதென்று ஒன்றுமே இல்லை. உன்னுடைய பாவங்களுக்கு பலி செலுத்தப்பட்டது, அதை முற்றிலுமாக அவ்h சுமந்துகொண்டார். எதற்காக, மற்ற எல்லா பலிகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கும்படியாக இந்த மகாப்பெரிய பலி செலுத்தப்பட்டாயிற்று. அதனுடைய விளைவாக தேவன் சொல்கிறார், “அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன் பலவான்களை அவர் தமக்காக கொள்ளையாகப்பங்கிட்டுக்கொள்வார்.” ஏதனாலென்றால், அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார், அவரிடத்தில் ஒரு குற்றமும் இருக்கவில்லை, அவர் எந்த குற்றமும் செய்யவில்லை. இருந்தபோதும், அவர் அநேகருடைய பாவத்தை தாமே சுமந்துகொண்டு, அக்கிரமக்காரருக்கா வேண்டிக்கொண்டார்.” எவ்வளவு அருமையான இரட்சகர்! ஏன்னவொரு அற்புதமான அதிகாரம்! இந்த நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு சிறப்பான சந்தர்ப்பமாக இது இருக்கிறது. நீங்க என்ன செய்யனுன்னு தெரியுமா. உங்களுக்கு சொல்ற அட்வைஸ் இதுதான். நீங்க இவரை உங்க சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** அருமையான ஆலோசனை. டாக்டர் பாக், ஜனங்கள் இந்த ஏசாயா 53ஐ கவனிக்கும்போது, இந்த தாசனானவர் மரித்து உயிர்தெழ வேண்டும் என்பதை கவனிக்கவேண்டியது அவசியமா?

**பாக:** நிச்சயமா. நீங்க இந்த பகுதியை பார்க்கும்போது அதில் குற்றநிவார பலி என்ற வார்த்தையை கவனித்தால் என்ன நடக்கப்போகிறது என்பதை விளங்கிக்கொள்ள முடியும் என நினைக்கிறேன். சிலர் இந்த பகுதியை வாசித்த பிறகு கூறும் கருத்து, "ஆமா, இவர் பாடனுபவித்தார், ஆனால் மரிக்கவில்லை என்கிறார்கள். அந்த சமயத்தில் அவர் சகித்த வேதனையை தான் இதில் சொல்லப்பட்டிருக்கிறது என்கின்றனர்." ஆனா பழைய ஏற்பாட்டில் மரணமில்லாத எந்த ஒரு பலியை பற்றியும் நான் கேள்விப்படவில்லை. அது ஒரு பலியாக இருக்கிறது. அதாவது பலிபீடத்தில் வைத்து தகனிக்கப்படும், இதுதா உண்மை. அந்த மாதிரியான மரணத்தைக் குறித்து தான் இந்த பகுதியில் பார்க்கிறோம். இந்த பகுதி பழைய ஏற்ப்பாட்டில் முக்கியமான து என்பதற்கு இன்னொரு காரணம் இது மிகவும் தனித்தன்மை கொண்ட அதிகாரம். புழைய ஏற்ப்பாட்டின் இந்த பகுதியில் மட்டும் தான் உங்கள் சார்பில் ஒருவர் மரிப்பார் என்பது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது, உனக்கு பதிலாக ஒருவர் பழியை ஏற்றுக்கொள்கிறார். பொதுவாக நமக்கு தெரிந்த விஷயம், "என்னுடைய பாவங்களுக்கு நான் தான் பொறுப்பு என்னுடைய பாவத்திற்கான தண்டனையை நான் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றிருப்போம்." ஆனா இங்க நமக்கு பதிலாக நமது சார்பில் ஒருவரென பார்க்கிறோம். இதனுடைய தனித்தன்மை இன்றியமையாத ஒன்றாக்குகிறது. ஏனென்றால் உங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பது போல அதை விட்டு விலகியிருப்பது

போல காண்பிக்கிறது, மேசியாவினுடைய வேலை என்ன என்பதை ஒருவரும் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அது தனித்தன்மைக் கொண்டிருக்கிறது. ஆனா இந்த பகுதியை பொருத்தவரை, நாம் பார்க்கும் இந்த கதாபாத்திரமாயிருக்கும், மேசியா, மற்றவர்களுடைய சார்பில் தன்னை பலியாக தந்திடும் தனித்தன்மை கொண்டவர். எனவே அவருடைய சிறப்புகளின் மத்தியில் தன்னுடைய தனித்தன்மையையும் தாம் அனுப்பப்பட்ட செயலின் தனித்துவத்தையும் அவர் எடுத்துக்காட்டுகிறார். அந்த தனித்தன்மை கொண்ட செயலில் ஜீவனுள்ள தேவனோடு மறுபடியும் இணைந்திடும் சிலாக்கியத்தை நாம் பெறுகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** டாக்டர். பாக், யூதர்கள் பலர் இந்த நிகழ்ச்சியை பார்க்கிறார்கள். இஸ்ரரேலில் இருக்கும் பலரும் இந்த நிகழ்ச்சியை பார்க்கிறார்கள். ஐரோப்பாவிலுள்ள யூத மக்களும் இந்நிகழ்ச்சியை பார்க்கிறார்கள். நீங்கள் அவர்களோடு அவர்களுடைய மொழியிலுள்ள, இந்த பகுதிடைய பற்றி சில காரியங்களை பேசும்படி கேட்கிறேன், அவர்கள் தங்களுடைய வாழ்வில் ஏதாவதொரு கட்டத்தில் வரப்போகும் மேசியா மற்றவர்களின் சார்பில் மரிப்பவராக மட்டும் இல்லாமல் அவர் மீண்டும் உயிர்த்தெழும்படி முன்னறிவிக்கப்பட்டிருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார், அந்த சம்பவம் நடந்த போது, அவர்கள் தங்களுடைய பாதையில் பெரிய மாற்றத்தை கண்டது உண்மைதானே?

**பாக:** வெல்,இந்த இடத்தில் நமக்கு ஏற்பட்ட மோதல்கள் பற்றி பேசினோம், அவர் உயர்த்தப்பட்டதை தேவ தூஷணம் என்று சொல்லப்பட்டது. வால்ட் இந்த மோதல் எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல முடியுமென நினைக்கிறேன். எங்களுக்காக சொல்ல முடியுமா, வால்ட்?

**கெய்சர்:** பூம்!

**பாக:** பூம்! ஆமா, அங்க, அந்த மோதலுக்கு, பிறகு, அங்க ஒரு வாக்குவாதம் உண்டானதை பார்க்க முடியும். ஒரு பக்கத்தில் இயேசு சொன்னதை வைத்து அது தேவ தூஷணம் என்று கூறும் கூட்டத்தார். மற்றொரு பக்கத்தில் இயேசு தம்மைப் பற்றி கூறிய உயர்த்தப்படுதல் மற்றும் தெய்வீக தன்மையை ஏற்றுக்கொண்டு அங்கிகரிக்கும் கூட்டத்தார். இப்ப கேள்வி என்னன்னா, இந்த வாக்குவாதத்தில் யாருடன் நிற்பதென எப்படி தெரிந்துகொள்ளலாம்? யாருடைய பக்கத்தில் நான் நிற்கவேண்டும், தேவ தூஷணமா அல்லது உயர்த்தப்படுவதா? அவருடைய உயிர்த்தெழுதல் அவர் இயேசுவைக் குறித்து தேவன் நமக்கு அளித்திடும் ஆதாரம். இந்த வாக்குவாதத்தில் அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் வெறுமையான கல்லறை என்பது தேவனுடைய ஆதாரம். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் விஷயம் நாம் மரித்தாலும் பிழைப்போம் மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்க்கையுண்டு, அதை நாம் கேள்விப்பட்ட விஷயம் தான், ஆனால் இந்த இயேசு இப்போது அவர் கல்லறையில் இல்லை, இந்த காட்சியிலிருந்து அவர் விளக்கப்பட்டு,

எனது சார்பில் என்னோடு, நின்று பேசிக்கொண்டிருக்கிறார். அவர் இருக்கும் இடத்தில் நமக்கு இடத்தை கொடுத்திருக்கிறார். இயேசு தம்மைக் குறித்து சொன்ன யாவற்றிற்கும் அதுவே மிகப்பெரிய சாட்சியாக இருக்கிறது. எனறே தேவ தூஷணம் மற்றும் அவர் உயிர்த்தப்பட்டார் என்ற இரண்டில் ஒன்றை தேர்வு செய்யும் பொறுப்பு என்னுடையது, இ;நத பகுதி, இயேசு வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது, தேவன் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கும் இந்த மேசியாவை நோக்கிப்பார்த்து நம்முடைய வாழ்வில் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் பற்றிக்கொள்ள வேண்டும். இந்த சிலாக்கியத்தை விட்டுவிட வேண்டாம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இதை விட்டுவிடவேண்டாம்.

**பாக:** உண்மைதான். அதாவது, அவர் தம்மைக் குறித்து சொன்னபடியே இருந்தார், அவர் தேவன் தமக்கு காண்பித்தபடியே எல்லாவற்றையும் செய்தார், அதனால் அவர் சொல்வதை நாம் கவனித்து கேட்க வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** ஏசாயா 53ம் அதிகாரத்தை நிகாரிக்க கூடாதென்பதை இன்னும் அழுத்தமாக சொல்ல முடியுமா?

**கெய்சர்:** சரி, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற மகிமையான காரியம் அவர் உயர்த்தப்பட்டதோடு முடிவடைந்தது: "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்."

அப்போஸ்தலர் 1, கூறுகிறார், “கலிலேயராகிய மனுஷரே ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், அவர் எப்படி வானத்துக்கு  எழுந்தருளிப்போனாரே அப்படியே மறுபடியும் வருவார்.” எனவே அவருடைய வருகைக்காக நாம் எதிர்நோக்கி காத்திருக்கிறோம். அதோடு நாம் ராஜாக்களும் மந்திரிகளும், தேசத்தின் தலைவர்கள் எல்லாரும் பிரமிப்படைந்தார்கள் என்பதைக் குறித்து பார்த்தோம். ராஜாதி ராஜாவாக கர்த்தாதி கர்த்தராக தேவாதி தேவனாக அவர் தோன்றும் அந்த நாளில் இவர்கள் என்ன சொல்லுவார்கள் என்று தெரியுமா? உங்களில் பலர் வாழ்வின் நோக்கத்தை நான் இழந்துவிட்டேன் என்றிருக்கிறீர்கள், உங்களுக்கு நான் சொல்கிNறுன், நீங்கள் நோக்கத்தின் நடுவில் இருப்பீர்க்ள். இந்த இயேசு அவரை தெய்வமாக இரட்சகராக ஏற்றுக்கொண்ட உங்களுக்காகவும் எனக்காகவும் மீண்டும் வரப்போகிறார். உயர்த்தப்படுதல் என்று பார்ததோமே, அது எல்லாவற்றையும் மேற்கொள்ளும்!

**ஆன்கர்பெர்க்:** சரி, நண்பர்களே, நாம் தொடர்ந்து இன்னும் பல தீர்க்கதரிசனங்களை பார்க்க இருக்கிறோம் இப்போது நமது கேள்வி: இவையணைத்தும் எதிர்காலத்தில் எதைக் குறிக்கிறது? அடுத்த வாரம் எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தை பார்க்க இருக்கிறோம், அதில் அவர், “இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்கிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன். அவர் ராஜாவாயிருந்து ஞானமாய் ராஜரீகம்பண்ணுவார். பூமியிலே நியாயத்தையும் நீதியையும்

நடப்பிப்பார் அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தரர் என்பதே." அதனுடைய அர்த்தம் என்ன? யூத மக்களுக்கு இந்த வசனம் என்ன சொல்கிறது? இந்த வசனம் நமக்கு என்ன சொல்கிறது? இது அருமையான தீர்க்கதரிசனம், அடுத்த வாரம் நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2014 A.T.R.I.